பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆனி 25 றஜப் 21 இதழ் 148

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-7-77

## கொழும்பு மெயின்வீதியில் பகல்வேளையில் ஆயுதமுனையில் கொள்ளை!

கொழும்பு, வெள்ளி

கொழும்பின் பெரும் ஜன சந்தடிமிக்க வீதியான புறக்கோட்டை பிரதான வீதியில் உள்ள கடை ஒன்றினுள்புகுந்த பயங்கர ஆயுதங்களைத் தாங்கிய மூன்று இளைஞர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று அங்கிருந்த, ஊழியர்கள் பாவனையாளர்கள் உட்பட 10 பேரை அறை ஒன்றினுள் பூட்டி வைத்துவிட்டு சுமார் 16 ஆயிரம் ரூபாவைக்கொள்ளை அடித்துக் கொண்டனர்.

கொழும்பு புறக்கோட்டை மெயின்வீதியில் உள்ள 'விசாக மால்ஸ்' கடையிலேயே நேற்று முன் தினம் மாலை இக்கொள்ளை இடம் பெற்றது. கடந்த புதன்கிழமை மாலை நீல உடையுடன் கடைக்குள்வந்த மூன்று இளைஞர்களில் ஒருவர் திடீரென முன்கதவை மூட இன்னுமொருவர் கையில் றிவோல்வரை எடுத்தாராம் மற்ற இருவரிடமும் கத்திகளும் கைக்குண்டுகளும் இருந்தனவாம்.

அடுத்து இருவர்கள் அங்கி

(6ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு சட்டசபையில் எதிர்க்கட்சி வெளிநடப்பு!

## பொன்னப்ப நாடார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க கோரிக்கை

சென்னை, ஜூலை 8

தமிழ்நாடு சட்டசபையில் தி. மு. கழக உறுப்பினர்களும், ஜனதா கட்சி உறுப்பினர்களும் இன்று வெளிநடப்பு செய்தனர்.

தமிழ்நாடு கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று தமிழ்நாடு சட்டசபையில் ஆரம்பமானபோதே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் ஜனதா கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

விமான விபத்தில் காலமான ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் பொன்னப்பநாடாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் சபையில் கொண்டுவரப்படவில்லை என்று குற்றஞ் சாட்டி இவர்கள் வெளி நடப்புச் செய்தனர்.

தி. மு. கழக உறுப்பினர்கள் சிறிது நேரத்தின்பின் சபைக்குத் திரும்பினர்

குறிப்பிட்ட அனுதாபத் தீர்மானம் [illegible] களுடன நாளை சனிக்கிழமை சபையில் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் சபையில் அறிவித்தார்.

நடைபெற்று முடிந்த சட்டசபைத் தேர்தலில் பொன்னப்பநாடாரின் மகன் போட்டியிட்ட தொகுதியில் தி. மு. க. போட்டியிடாமல் தனது வேட்பாளரை வாபஸ்பெற்றது என்பதும் அத்தொகுதியில் பொன்னப்பநாடாரின் மகன் வெற்றி பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (உ)

## மாலை மரியாதையில் ஒருசாதனை

யாழ்ப்பாணம், சனி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாஷையூர்த் தொகுதி தேர்தற்பிரசாரக் [illegible] மாலை மரியாதையில் ஒருசாதனை நிலை நாட்டப்பட்டது. சுமார் அரைமைல் நீளமான கியூவரிசையில் நின்று மக்கள் மாலை மரியாதை செலுத்தினர். காசுமாலை, பலூன்மாலை சொக்கலேட் மாலை எனப் பல வகை மாலைகள் ஆதரவாளர்களால் சூட்டப்பட்டன. சுமார் 16 நிமிடங்கள் இடை விடாது ஒலிக்கக்கூடிய முறையில் வெடி கொளுத்தப் பட்டது. இதற்கெனப் பெரும் செலவில் ஒரு வெடியாலான பந்தலை அமைக்கப்பட்டு "யோகேஸ்" பேச எழுந்ததும் அவ் வெடிப்பந்தலுக்குத் தீ வைக்கப் பட்டது. அபேட்சகர் தனது சொற்பொழிவை ஆரம்பிக்க சுமார் 30 நிமிடங்கள் தாமதமாகியது யோகேஸ்வரன் கழுத்தில் ஒரேயொரு ஆளளவு உயரமான மலர் மாலையைமட்டும் அணிந்தபடி உரையாற்றினார். மலர் மாலைகள் மலைபோல் குவிந்து கிடந்தன.

மேடை அமைப்பிலும் இக்கூட்டம் தனிச்சிறப்பு பெற்றது. சிவப்பு, மஞ்சள் பின்னணியில் உதய சூரியன் உதிப்பது போல் ஒளிரும் பல்ப்புகளால் மேடை அமைக்கப்பட்டு தனி மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது

இரத்தத் திலக மிடுவதிலும் ஆதரவாளரிடையே பலத்த போட்டி இடம்பெற்றது. ஒரு ஆதரவாளர் தமது கையில் குண்டூசியால் குத்தி இரத்தத்தை எடுக்க முயன்ற போது குண்டூசி அவரின் தோலில் ஏற ஒரு நிமிடம் எடுத்தது. அவ்வாதரவாளர் மிகவும் சிரமப்பட்டு கையில் ஊசியை ஏற்றி இரத்தத்தை எடுத்துத் திலகமிட்டார். (கி-அ)

## இன்று நடைபெறும் விவசாயக் கருத்தரங்கு

### புழுத்தாக்கத்திலிருந்து பாதுகாக்க ஆலோசனைகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட விவசாயிகளை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைக்கும் தீர்வு காணும் வகையிலான ஆலோசனை வழங்கும் யாழ். லயன்ஸ் கழகத்தின் விவசாயக்கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள யாழ். அரசாங்க மகளிர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது

பிரதி விவசாய இணைக்களப் பணிப்பாளர் திரு. சு. ஜெயசேகரா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில், யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் வெங்காயத்தையும் மிளகாயையும் தாக்கும் புழுக்கள் பற்றியும் அவைகளைக் கட்டுப்படுத்தும் வழி முறை பற்றியும் விரிவாக ஆலோசனை வழங்கப்படும்.

இக்கருத்தரங்கின் வரவேற்புரையை யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் நிகழ்த்துவார். முன்னுரை யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா

(6-ம் பக்கம் பாாக்க)

## இங்: 206—3

மான்செஸ்டர், ஜூலை 8

இங்கு நடைபெறும் ஆஸ்திரேலியா-இங்கிலாந்து கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கட்டுக்களையும் இழந்து மொத்தம் 297 ஓட்டங்கள் எடுத்தது. இன்று இடைவேளைவரை இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் விக்கட்டுக்கள் நஷ்டமின்றி 12 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இன்றைய 'ஸ்கோர்' விபரம்: ஆஸி முதல் இன்னிங்ஸ்- 297 இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் 206-3

## தமிழக சட்டசபையில் சுவையான சம்பவங்கள்

சென்னை, ஜூலை 8

இன்று நடைபெற்றதமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில், சூடான சம்பவங்களும் சில சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னப்ப நாடாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்காதது ஏன்? என்று, ஜனதா-தி. மு. கழக கூட்டுக் கேள்விக்கணைகளுடன் சூடு பிடித்த சட்டப் பேரவைக் கூட்டம், பின்னர் அமைதி பெற்று, கலகலப்பான நிகழ்ச்சிகளுடன் ஒரு படியாக தணிந்தது.

ஆனாலும் கூட்ட ஆரம்பத்தில் ஆட்சேபனை தெரிவித்து வெளிநடப்பு செய்த ஜனதா கட்சியினர் கூட்டத்துக்குப் பின்னர் திரும்பவே இல்லை! தி. மு கழகம் மட்டும் முதலில் வெளிநடப்பு செய்து இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் கலந்து கொண்டது.

திரு பொன்னப்பநாடார் மறைவுக்கு இங்கு ஏன அனுதாபம் தெரிவிக்கப்படவில்லை என்று ஜனதா கட்சி தலைவர் திரு ஜேம்ஸ் குரல் எழுப்பியபோது, முதல் அமைச்சரோ அல்லது, நிதி அமைச்சரோ சபையில் இருக்கவில்லை. அமைச்சர் திரு எஸ் இராமச்சந்திரனே பதிலளித்தார்.

ஒரு கட்டத்தில், அங்கத்தவர்கள் கரகோஷம் செய்து தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டபோது சில பழைய முகங்களில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.

கரகோஷம் தணிந்த உடனேயே முஸ்லிம் லீக் உறுப்பினர் ஒருவர் எழுந்து, சபாநாயகரின் கவனத்துக்கு எதையோ கொண்டுவர முயற்சிக்கையில், சபாநாயகர் திரு. முனு ஆதி அதனைப் புரிந்து கொண்டு; "இங்குள்ள அங்கத்தவர்கள் பலரும் புதியவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் தீப்பெட்டி தொழிற்சாலை

### பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் அமைக்கிறது

பண்டத்தரிப்பு, வியா.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நவீன தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவுள்ளது.

இதற்கான அனுமதியை கைத்தொழில் அமைச்சு வழங்கியுள்ளது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இத் தீப்பெட்டித் தொழிற்சாலை நிறுவப்படும்.

இத் தொழிற்சாலைக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும் வெகு விரைவில் இத்தொழிற்சாலையில் தீப்பெட்டி உற்பத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் இச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (இ)

யாழ். மருத்துவமாதர்

## வேலைநிறுத்தம் நீடிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மருத்துவ மாதர்களின் வேலை நிறுத்தம் இன்று மூன்றுவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் பிறந்த குழந்தை திடீரென காணமற் போய்விட்டதைத் தொடர்ந்து மருத்துவ மாதர் ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

யாழ். அரசாங்க மருத்துவ மாதர் சங்க காரியதரிசி திருபதி க. பூபாலேந்திரா இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பிரசவ வார்ட்டில் நடந்த 20-ம் திகதி காலை காணமற் போன சிசு சம்பந்தமாக பொறுப்பற்ற, மருத்துவ மாதுவுக்கு மட்டும் அநீதியான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சிசுவுக்கு பசிக்குப் பால் ஊட்ட கொடுக்கப்போன மருத்துவ மாது எப்படிக் குற்றவாளியாக முடியும். மருத்துவமாது வேறு எங்கும் செல்லவில்லை. உத்தரவின்படி அதே வார்ட்டில் வேறு கடமையில் அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

### பணிவாக்கு

தன்னுடைய குற்றங்களை மறந்துவிட்டும் பிறருடைய குற்றங்களைப் பார்ப்பது மனிசனிடம் பழக்கமாயிருக்கிறது இப்பழக்கத்தின்பயனாய் அவன் ஈற்றில் துன்பமடைவது திண்ணம்.

—காந்திமகான்

ஈழநாடு

THE EELANAADU

## துணிப்பஞ்சம்

துணிவிலை உயர்ந்து துணிப்பஞ்சம் அதிகரித்து பொதுமக்கள்படும் கஷ்டம் கொஞ்சமல்ல. உணவு இல்லாமல் சிலநாட்கள் இருக்கலாம். ஆனால் துணிஇல்லாமல் அரைக்கணமும் இருக்க முடியுமா? எட்டுமுழவேட்டியின் விலை ரூபா 40க்கு மேல் ஆகிறது ஏன் இவ்வளவு விலை என்று கேட்டால், இறக்குமதியாகும் ஜவுளிகளுக்கும் நூலுக்கும் 'பீக்ஸ்' 65 சதவீதம் கட்டணம் செலுத்தவேண்டி இருப்பதாகவும் நூல் ஜவுளி எல்லா இறக்குமதிகளும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், நூல் தட்டுப்பாட்டினால், கைத்தறி உற்பத்தி பெரிதும் தடைபட்டிருப்பதாகவும், கைத்தறி நெசவாளர் வேலை இல்லாமல் தவிப்பதாகவும், வெளிநாட்டுச் செலாவணிப் பஞ்சத்தால், நூல் ஜவுளி முதலியவற்றை அரசாங்கம் தாராளமாக இறககுமதி செய்யமுடியாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

உணவுக்குஅடுத்தபடியாக உடையே அத்தியாவசிய தேவையாக இருந்தும், உள்நாட்டில் இதற்கான உற்பத்தியைப் பெருக்க வழிவகைகள் ஓரளவும் செய்யாமல், பிறநாடுகளையே நம் மானத்தைக் காக்க எதிர்நோக்கியிருப்பது பரிதாபத்துக்குரிய நிலையாகும். துணிப்பஞ்சத்தைத் தீர்க்க வேண்டியது ஒரு தேசியப் பிரச்னை. என்றாலும் இது குறித்து எந்தக் கட்சியும் எவ்வித உருப்படியான யோசனை செய்வதாகவோ திட்டம் தயாரித்துள்ளதாகவோ தெரியவில்லை.

விடுதலை இயக்கத்துக்குப் போராடிய மகாத்மாகாந்தி, மக்களின் துணித்தேவையை உணர்ந்து, கையால் நூற்று கைத்தறியால் நெய்த கதர் துணியை மிக முன்னேசனையுடன் அமோகமாக உறபத்திசெய்ய முற்பட்டார். மக்களின் வேலையில்லாக் கஷ்டததை ஒருபுறம் குறைத்து, அதேசமயம் துணி உற்பத்தியையும் பெருக்கினூர். நாடு சுதந்திரம்பெற்று முப்பதுவருடங்களாகியுள்ளபோதும், கையால் நூற்று கைத்தறியால் நெய்த கதர்துணிஉற்பத்தி மேன்மேலும் பெருகுவதையும், இதனால் இலட்சக்கணக்கான மக்கள் சிறப்பாக எளியபெண்கள் வேலைவாய்ப்புப் பெறுவதாகத் தெரிகிறது. துணி உற்பத்தி ஒருபுறம் பெருகுவதுடன் வேலையில்லாப் பிரச்னையும் ஓரளவு தீருவது இரட்டிப்பு நன்மை.

பக்கத்திலுள்ள ஒருபெரிய நாட்டில் இவ்விதம் நடக்கையில், சிறிய நாடான ஈழத்தில் துணி உற்பத்தி விஷயமாக எவ்வித முயற்சியும் எடுக்காமல், தன்னிறைவுக்கான ஏற்பாடு ஓரளவும் செய்யாமல் இருப்பது பெரிய துரதிருஷ்டமாகும். இது தேர்தல் சமயம். பல வேட்பாளர்களும் ஏதேதோ பேசுகிறார்கள். ஆனால் மக்களின் முக்கிய தேவைகளில் ஒன்றான துணிப் பஞ்சத்தைத் தீர்க்க யாரும் எவ்வித முயற்சியும் யோசனையும் கூடச் செய்யக்காணோம். கதர் ஒருமேலான குடிசைத் தொழில். மூலப் பொருளான பஞ்சை விளைவிக்க இங்கு நல்ல வாய்ப்புண்டு. கதர் உற்பத்திக்கு எவ்வித வெளிநாட்டுச் செலாவணியும் தேவையில்லை. அரசாங்கம் இதுபற்றி எவ்வித முயற்சியும் எடுக்காமல் இருப்பினும், யாழ்ப்பாணத்திலுள்ள நாம் கதர்உற்பத்திக்கானமுயற்சி செய்ய முடியாதா? இதற்குக்கூட அரசாங்கத்தின் உதவி தேவையா? மக்கள் துணிப்பஞ்சத்தால்தவிக்கையில், நம்கையே நமக்குதவி என்று, வழிகாட்டி, துணி உற்பத்திக்கு ஓரளவாவது வழிவகைகள் செய்தால், ஆக்கமுறையில் காரியங்கள் செய்ய முற்பட்டால், அந்த அளவுக்கு தமிழர் தங்கள் பொருளாதார விடுதலைக்கான உதவிகளைச் செய்து கொண்டவர்களாவர்.

## "காங்கிரஸ்கட்சியை குமார் பலவீனப் படுத்துகிறார்"

— டாக்டர் ஏபிரகாம்

யாழ்ப்பாணம், சனி

'கூட்டணியினர் தமிழ்க் காங்கிரஸை ஒதுக்கும் பட்சத்தில் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் சிலர் சுயேச்சையாகப் போட்டியிட்டு 5 அல்லது 9 தொகுதிகளைக் கைப்பற்றி அமரர் ஜி. ஜி.யின் பாதையில் தொடர்ந்து நாம் செல்லலாம் என்று நான் கூறியபோது அதனை ஒத்துக்கொண்டவர் திரு. குமார் பொன்னம்பலம். ஆனால் நான் இன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் குமார் பொன்னம்பலமும் போட்டியிடுவது தமிழ்க்காங்கிரஸைப் பலவீனப்படுத்துகின்றது'

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ எல். ஏபிரகாம், கற்குளம் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். இக்கூட்டம் திரு. எம். பசுபதி தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் ஏபிரகாம் மேலும் பேசுகையில் 'நான் எதிர்வரும் 20ம் திகதியுடன் ஒதுங்கிநின்று வேறொரு சுயேச்சை அபேட்சகருக்கு ஆதரவளிக்கப்போவதாகச் சிலர் புரளிக் கதையைக் கட்டிவிட்டுள்ளனர். இதை நம்பவேண்டாம் என்று யாழ். தொகுதி மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன். எநதக் காரணத்தைக்கொண்டும் நான் போட்டியினின்று ஒதுங்கி விடப்போவதில்லை'

திரு. ஏ. செபஸ்ரியான் பேசுகையில் கூறியதாவது:

'தமிழனுக்கு உண்மையான விடுதலை கிடைக்க வேண்டுமானால் தமிழனைத் தமிழன் அடக்

## "கூறியது ஒன்று செய்வது வேறொன்றும்"

### வி. என். கவலை

யாழ்ப்பாணம், சனி

"அமரர் ஜி ஜி பொன்னம்பலம் அரசியலில் முழுமையாகப் பிரவேசித்துள்ளமையினால் அவரது மகனை அரசியலில் பிரவேசிக்கக்கூடாதெனப் பல முறை பணித்துள்ளார். இதை அவரது மகன் குமாரே என்னிடம் பல முறை கூறியுள்ளார். அப்பா என்னை அரசியலில் பிரவேசிக்கக்கூடாதெனக் கூறியிருப்பதால், நான் இயக்கப் பணிகளில் ஈடுபடமாட்டேன். எனக்கு அரசியல் தேவையில்லையென திரு குமார் பொன்னம்பலம் என்னிடம் கூறிவிட்டு, ஒருதேசிய இனம் விடுதலை கோரி ஜீவமரணப் போராட்டம் நடாத்துவேளையில் இன ஒற்றுமையைக் குலைப்பது வேதனைக்குரியது" என சாவகச்சேரித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு வி என். நவரத்தினம் கூறினார்.

பாஷையூர் அந்தோனியார் ஆலயத்திற்கு முன்னிலையில் ஆசிரியர் திரு. அழகையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு வி. என். நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இயக்கத்தின் போராட்டங்களில் ஐந்து வருட காலம் உழைத்தவர்களுக்கே வேட்பாளர் நியமனம் வழங்கப்படுமென நடவடிக்கைக் குழு கட்டுப்பாடு விதித்திருந்தது. நாம் இனத்தின் விடுதலைக்குப் போராடிக்கொண்டிருந்த வேளையில் அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்தும் போராட்டத்தை ஒத்திவைக்கவில்லை.

வணக்கத்துக்குரிய திரு. சர்வானந்தா பேசுகையில் அமரர் ஜி ஜி.பொன்னம்பலம் தனிநாட்டுக் கொள்கையை ஆதரிக்கவில்லையென கூறுவது தவறானதாகும். ட்ரயல்-அட்பார் வழக்கில் திரு ஜி.ஜி. பொன்னம்பலம் தனித் தமிழ் நாடு பற்றி தனது சட்டவாதத்தால் உலகுக்கு உணர்த்தியவர் பலஸ்தீன விடுதலை இயக்கம் நாடுகோரி போராட்டம் செய்யும் போது இலங்கைத் தமிழர் தமது தாயகத்தை மீட்க போராடுவதில் என்ன தவறுண்டு என்று கோரினார். மதகுரு அரசியலில் ஈடுபடுவது தவறானதென கூறுகிறார்கள் நான் ஆண்டவனுக்கு கட்டுப்பட்டவன் எனது வாழ்வில் மற்றவர்களை சந்தோஷப் படுத்தவே ஆண்டவன் என்னை அனுப்பியிருக்கிறான். இனம் விடுதலை கோரி நிற்கும்போது இனத்தின்வாழ்வுக்கு சந்தோஷமளிக்கக்கூடிய நிலையில் நான் அரசியலில் உண்மையை விளக்குவது இறைவனுக்கு செய்யும் நன்றியாகும்.

திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் "இன்று நடைபெறும் தேர்தல் இலட்சியத்தின் அடிப்படையில், இனவிடுதலைக்காக நடைபெறும்தேர்தல் இத்தேர்தலில் தந்தை செல்வா என்கின்ற மனிததெய்வத்தின் இலட்சிய வேட்கையை உரிமையுடன் வென்றெடுப்போம். தமிழனைத் தமிழன் ஆளவேண்டும் அதுதான் இன்றைய இளைய தலைமுறையின் சிந்தனை" என்றார்.

திருவாளர்கள் வண்ணை ஆனந்தன், கரிகாலன், அலோசியஸ் கிறிஷ்டியன்உட்பட பலர் உரையாற்றினார்கள். (கெ-இ)

## 'தமிழரின் பொருளாதாரம் பின்தங்கியுள்ளது"

### மானிப்பாயில் முதலியார் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

"தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ளார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமரர் ஜி. ஜி. மந்திரிசபையில் அங்கம் வகித்த காலத்தில் தொழிற்சாலைகளை உண்டாக்கி சேவை புரிந்ததை மறக்க முடியாது" என்று மானிப்பாய்த் தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ் சார்பில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. சி. பொ. வ. மா. க. முதலியார் கூறினார்.

மாகியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையத்தருகில் திரு. பி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், கடந்த 18 வருடங்களாக மானிப்பாய்த் தொகுதியில் ஒரு முன்னேற்ற வேலையும் மேற்கொள்ளப்படவில்லை" என்றார். (உ)

## ஈழத்துச்சிதம்பரம் அம்பாள் உற்சவம்

காரைநகர், சனி

ஈழத்துச்சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோவில் அம்பாள் உற்சவம் எதிர்வரும் 11ந்திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அன்று பகல் 10மணியளவில் அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் கொடியேற்றுவைபவமும் நடைபெறும். தினமும் மாலை 7மணியளவில் அம்பாள் வீதியுலாவரும் காட்சியும் சமயப் பிரசங்கங்களும் நடைபெறும்.

19ந்திகதி அம்பாள் இரதோற்சவமும் 20ந்திகதி தீர்த்தோற்சவமும் அன்று இரவு ஆடிப்பூர உற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலங்களில் விசேஷ பஸ்சேவைகளும் ஒழுங்கு செய்யப்படவுள்ளன. திருவிழாக்காலங்களில் வெளியூரில் இழுந்துவரும் அடியார்களுக்கு தங்குமிடவசதிகள் யாவும்மாணிவாசகர்மடாலயத்தில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும். (அ)

கியாளும் நிலை முதலில் மாறியாக வேண்டும்.

"ஒற்றுமை வேண்டும் என்று கூறி சுயேச்சை வேட்பாளர்களைத் தாக்குவோர் மட்டுநகர்த் தொகுதியில் முஸ்லிம்களைப் புறக்கணித்து இரு தமிழர்களுக்கு இடமளித்துள்ளனர்." (அ)

## ரயில் சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்- கொழும்பு ரயில் கடுகதி சேவைநேரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காலை 6-05க்கு காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்

(5ம் பக்கம் பார்க்க)

( 5ம் கலத்தொடர்ச்சி)

லில் கட்டப்பட்டுள்ளது. இந்திய மொழிகள், இசை இவை கற்பிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இங்கு வசிக்கும் சினிமா நடிகை பத்மினி, பரதநாட்டிய வகுப்புகளை நடத்திவருகிறார்.

அமெரிக்காவில் சுமார் இரண்டரை லட்சம் இந்தியர் வசிக்கின்றனர். இக்கோயில் பினஷிங்கில் கட்டப்பட்டுள்ளது. இது தவிரப் பிட்ஸ்பர்க்கில் வேங்கடேசப் பெருமானுக்கு வேறொரு கோயில் கட்டப்பட்டுள்ளது.

ஹாஸ்டன் எனுமிடத்தில் ஓர் அம்மன் கோயில் கட்ட, ஸ்ரீலஸ்ரீ பன்றிமலைச் சுவாமிகள் அஸ்திவாரக்கல் நாட்ட இருக்கிறார்.

## ஐயாறன் எழுதுவது

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்று கூறுவதுண்டு.

54 மாதங்களுக்குமுன் இருவரும் தமிழக சட்டசபையில் இருந்து பிரிந்தனர் அப்போது கலைஞர் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தார். இப்போது எம். ஜி. ஆர். முதல் அமைச்சர் ஆகிவிட்டார்.

இவ்வளவு காலத்துக்குப்பின் சபையில் இருவரும் கூடிய போது, அக்காட்சியைப் பார்க்க பலரும் ஆவலாக இருந்தனர்.

காலை 9-55 மணிக்கு முதல்வர் எம். ஜி. ஆர். முதலாக வந்தார். இரு நிமிடங்களில் திரு. கருணாநிதி வந்து, எதிர்க்கட்சி தலைவருக்குரிய இடத்தில், முதல்வருக்கு எதிரே அமருகையில், எம். ஜி. ஆரையும், மற்ற மந்திரிகளையும் பார்த்து கைகூப்பினார். அவர்களும் கைகூப்பினர். ஆனால்இருவரும் 'வணக்கம்' என்று சொல்லவுமில்லை. 4 மணி நேரமும் ஒரு கஜதூரத்தில் இருந்தும் இருவரும் ஒன்றுமே பேசாமல் சமாளித்தது பெரிய சாதனை என்று "ஹிந்து" பத்திரிகை நிருபர் கூறுகிறார்.

ஆனால் கலைஞரும், நிதி அமைச்சர் மனோகரனும் ஏதோ பேசிக்கொண்டார்கள்.

1972ம் வருடம் டிசம்பர் 2ந் திகதி சபையில் போட்டிக் கூட்டங்கள் நடந்து. இரு தலைவர்களும் பிரித்தபின் இப்போதுதான் கூடுகிறார்கள்.

இவ்விரு தலைவர்களுக்கும் பொதுவான நண்பர்கள் பலர் சபையில் இருப்பதாகவும், அவர்களது மௌனம் சீக்கிரம் கலைந்து, இருவரது உறவுகளும் மேம்படக்கூடுமென்றும் நம்பப் படுகிறது.

ஃ ஃ ஃ

நியூயார்க் நகரிலே ஒரு புதிய பிள்ளையார் கோவில் கட்டப்பட்டு, கும்பாபிஷேக வைபவம் பல மணி நேரம் மந்திர முழக்கங்களுடன் நடைபெற்றது.

கருங்கல் திருப்பணியுடன் கூடிய இக்கோவிலில் பிள்ளையாருடன், வேங்கடேசப் பெருமான், அன்னை பத்மாவதி, சிவலிங்கம், சண்முகப் பெருமான் முதலிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு சில அமெரிக்கர் உட்பட பல இந்துக்கள் கூடி தரிசித்தனர். பன்றிமலை சுவாமிகளுடன், திருப்பதியிலிருந்து சில குருக்கள்மார்களும் இதற்காகப் பறந்துவந்தனர்.

கங்கை, காவேரி, பஞ்சதீர்த்தம் முதலியவற்றால் மூர்த்திகளுக்கு அபிஷேகங்கள் நடைபெற்றன.

கும்பாபிஷேகம் முடிந்ததும் நாளெல்லாம், பூசைகளும் அர்ச்சனைகளும் நடைபெற்றன. 3 நாட்களாக யாகங்கள் நடந்தன. அமெரிக்காவின் நாலா புறங்களிலிருந்தும் பல இந்துக்கள் வந்திருந்தனர். தேவாரங்களும் பாசுரங்களும் பாடல் பெற்றன.

1970ம் ஆண்டு இந்தியக் குடியரசுத் தினத்தில் ஆரம்பமான திருப்பணி, இம்மாதம் 4ந் திகதி அமெரிக்க சுதந்திர தினத்தன்று கும்பாபிஷேகத்துடன் முடிவுற்றது.

ஆசியாவுக்கு வெளியே கருங்கல் திருப்பணியுடன் இந்து ஆலயம் கட்டப்படுவது இதுவே முதல் முறையாகும். திருப்பதி தேவஸ்தானத்தார் 16 லட்சம் ரூபாய் மான்யம் அளித்ததுடன், சிற்பிகள் பலரையும் அனுப்பிவைத்தனர். 10 லட்சம் டாலர்கள் இதற்குச் செலவாகலாம். இதில் பெரும் பகுதியும் அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர் வருவித்து அளித்ததாகும்.

கலை நிகழ்ச்சிகளுக்கான கல்யாண மண்டபமும் இக்கோயி

(4-ம் கலம் பார்க்க)

## பெலிசை பாதுகாக்க பிரிட்டன் நடவடிக்கை

லண்டன், ஜூலை 8

பிரிட்டன் தனது குடியேற்ற நாடான பெலிசைப் பாதுகாப்பதற்காக அங்கு தன் துருப்புகளை அனுப்பிவைத்துள்ளது.

பெலிசுக்குள் கௌதமாலா ஊடுருவல் செய்யும் நடவடிக்கையைமுறியடிக்கும்வகையில் விமானங்களையும் துருப்புகளையும்பிரிட்டன் அங்கு அனுப்பி வைத்திருக்கிறது.

பெலிசில் 1000 பிரிட்டன் துருப்புகள் ஏற்கனவே நிலைகொண்டுள்ளன. (உ)

## மாலாவி அமைச்சரவை கலைப்பு: ஜனதிபதி நடவடிக்கை

லண்டன், ஜூலை 8

மாலாவி ஜனதிபதி திரு பண்டா தமது அமைச்சரவையின் சகல உறுப்பினர்களையும் பதவிநீக்கம்செய்துள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

புதிய பொதுத் தேர்தல் ஒன்றுநடத்தப்படும்பொருட்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா அல்லது இப்பதவி நீக்கத்திற்கு வேறு காரணங்கள் உண்டா என்பவற்றை தெளிவுபடுத்தக்கூடிய வகையில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

1966-ம் ஆண்டு பிரிட்டனிடம் இருந்துமாலாவி சுதந்திரம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# அமெரிக்க-சீன நட்புறவு

## பலப்பட வேண்டியது அவசியம்"

### ஜிம்மி கார்ட்டர் வலியுறுத்து

வாஷிங்டன், ஜூலை 8

சீன-அமெரிக்க உறவுகள் விருத்தியடைய வேண்டியதன் அவசியத்தை அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் வலியுறுத்தியுள்ளார்.

சீனவுக்கான புதிய அமெரிக்க தூதுவர் திரு. வுட்கொக்கிற்கு வாஷிங்டனில் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே திரு. கார்ட்டர் இவ்வாறு கூறினர்.

சீனத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தித்தாமதமின்றி தமக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு திரு. கார்ட்டர் திரு. வுட்கொக்கிடம் தெரிவித்தார்.

சீனவுடன் அமெரிக்க நட்புறவுடன் தொடர்ந்தும் நடந்துகொள்ள விரும்புகிறது என்று திரு. கார்ட்டர் இவ்விருந்துபசாரத்தின்போது ஆணித்தரமாகக் கூறினர்.

இதேவேளை அமெரிக்கா தாய்வானுடனன உறவைத் துண்டிக்கப்போகிறது என்று கூறப்படுவதை வெள்ளை மாளிகை நேற்று மறுத்தது. (உ)

பொதுத்தேர்தலில் போட்டியிட

## பூட்டோவுக்கு அனுமதி வழங்கப்படும்!

### பாக். இராணுவ அரசு அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 8

தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலி பூட்டோ அக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிட அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுவார் என்று இஸ்லாமாபாத்தில் இருந்து வெளியாகிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனப் பூட்டோ மீது விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை எதிர்க் கட்சிகளால் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனல் இதுபற்றி விசாரணை செய்யும் அதிகாரம் இராணுவத்திற்குக் கிடையாது என்று இராணுவ அரசு தெரிவித்துள்ளது. இது இவ்வாறு இருக்க பாகிஸ்தான் அரசு பாரதத்துடன் நட்புறவை வலுப்படுத்திக் கொள்ளவிரும்புகிறது என்று பாகிஸ்தான் தூதர் ஜனப் ஹசன் பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயைச் சந்தித்துத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இவ்விருப்பத்தை பாரதம்வரவேற்கிறது என திரு வாஜ்பாய் அவரிடம தெரிவித்ததாக சமாச்சார் அறிவிக்கிறது. (உ)

## "அன்று நாம்கூறியதை இன்று கூட்டணி கூறுகிறது"

### சுயாட்சிக்கழக வேட்பாளர்

வண்ணார்பண்ணை, வெள்ளி

'தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவர உத்தியோகபூர்வமான முறையில் நடவடிக்கை மேற்கொண்டால் தமிழர் சுயாட்சிக்கழக அபேட்சகர்கள் போட்டியிலிருந்து வாபஸ்பெற்று தனிநாடு அமைக்கும் திட்டத்திற்கு முழுஆதரவையும் கொடுப்பதுடன் அமைப்பு வேலைகளுக்கு முன்னின்று உழைப்பர்

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத்தின் ஆதரவில் கோப்பாய்த்தொகுதியில் போட்டியிடும் திரு. வ. த. ஜெயதேவன் புத்தூர் மருதடியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கிராமசபை உறுப்பினர் திரு. சின்னத்தம்பி தலைமை

[6ம் பக்கம் பார்க்க]

# எகிப்து-இலங்கை

## வர்த்தக உடன்படிக்கை

கெய்ரோ, ஜூலை-8

எகிப்துக்கும், இலங்கைக்கும் இடையிலான பொது வர்த்தக உடன்படிக்கை ஒன்று கெய்ரோவில் கைச்சாத்தாகியுள்ளது.

இந்த உடன்படிக்கையின்படி இரு தரப்பிலும் இருந்து வந்த கொடுக்கல் வாங்கல் முறை இனிமேல் அகற்றப்படும்.

கடந்த ஆண்டு எகிப்து இலங்கையிடம் இருந்து 9 கோடி 10லட்சம் ரூபா பெறுமதிமிக்க தேயிலையைக் கொள்வனவு செய்தது.

இந்த வர்த்தக உடன்படிக்கையில் இலங்கையின் சார்பில் வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு. கலேகம கைசாத்திட்டார். (உ)

## தி. மு. க. சட்டமன்றத் தலைவர் சங்கரலிங்கம்

சென்னை, ஜூலை 8

திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றத் தலைவராக திரு. சங்கரலிங்கம்தெரிவு செய்யப்பட்டுள்ளார்

துணைத்தலைவராக திரு கோ. சி. மணி தெரிவானுர்.

தி.மு.க. தலைவர் கலைஞர் மு கருணநிதி தலைமையில் நேற்று சென்னையில் நடைபெற்றகழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இத்தெரிவுகள் இடம்பெற்றன. (உ)

## யூகோஸ்லேவிய — இலங்கை நட்புறவு: உபஜனதிபதி பெருமிதம்

பெல்கிரேட், ஜூலை 8

யூகோஸ்லேவியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக உறுதியான உறவுகள் நிலவிவருகின்றன என்று யூகோஸ்லேவிய உப ஜனதிபதி டொஹன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

யூகோஸ்லேவியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவர் திரு. விஜய குணவர்த்தன தமது பத்திரங்களை உப-ஜனதிபதியிடம் கையளித்தார்.

இலங்கை ஜனதிபதி, பிரதமர், நாட்டு மக்கள் ஆகியோருக்கு உப ஜனதிபதி தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

தமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு இவ்விதம் வலுப்பட்டிருப்பதற்குக் காரணம் பரஸ்பரம் புரிந்துகொண்டு பழகும் தன்மைதான் என்றுர் அவர்.

கூட்டுச்சேரா இயக்கத்தில் இருநாடுகளும் கொண்டுள்ள உறுதிப் பாட்டையும் அவர் குறிப்பிட்டார்.

திரு.குணவர்த்தன பதிலளித்துப் பேசுகையில் "கூட்டுச் சேரா இயக்கம் பற்றிய கொள்கை இரு நாடுகளுக்கும் இடையில் ஒரு வாழ்வு முறையாக அமைந்துவிட்டது" என்றுர். (உ)

## முஸ்லிம்கள் நன்றிமறவாது கூட்டணியை ஆதரிக்க வேண்டும்

— மொஹிதீன் பிச்சை

யாழ்ப்பாணம், சனி

'புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சமயம் குரல் கொடுத்த உத்தமர் தந்தை செல்வா. அவர் ஒரு மதத்தவரின் தலைவர் அல்ல. தேசியத் தலைவரான அவர் உருவாக்கிய இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி. ஆகவே முஸ்லிம்கள் நன்றியை மறக்காமல், எமக்காகக் குரல் கொடுக்கும் ஒப்பற்ற இயக்கத்துக்கு ஆதரவளித்து மேலும் எம்மினத்தவருக்கு வரும் இன்னல்களைப் பாதுகாக்க, தமிழர்-முஸ்லிம்கள் இணைந்து வாழவேண்டும்.' இவ்வாறு ஜனப் மொஹிதீன் பிச்சை கூறினர்.

இக்கூட்டம் யாழ்ப்பாணத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரனை ஆதரித்து யாழ்ப்பாணம் ஹாஜி அபுபக்கர் வீதியில் நடைபெற்றது.

திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், 'தமிழினத்தின் போராட்டத்திற்கு களம் அமைப்பதற்காகவே நான் தேர்தலில் நிற்கின்றேன் இதை இன்று மக்கள் நன்கு உணர்ந்துவிட்டார்கள். நீங்கள் வழங்கும் ஆதரவுக்காக எனது சுகபோகத்தை மறந்து, உங்கள் நல்வாழ்வுக்கு போராடுவேன்' என்றுர்.

தொழிலதிபர் திரு. எஸ். தியாகராசா பேசுகையில், "இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றியின் முனையில்நின்றுலும்எல்லோரும்யாழ் நகரின் வெற்றியை ஆவலோடு எதிர்பார்க்கிறுர்கள். இது காலமும் பல முனைகளில் நின்ற நமது மக்கள் இன்று ஓரணியில் இனவிடுதலைக்கு எழுச்சி கொடுப்பது பெருவெற்றிக்கு அறிகுறியாகும்" என்றுர்

சட்டத்தரணி திரு. யேசுதாசன், திரு. சிவரெத்தினம், வண்ணை ஆனந்தன் உட்படப் பலர் உரையாற்றினர். (கெ-இ)

## 'சோதனைமிக்கவேளையிலும் கலாச்சாரத்தை பாதுகாத்தவர்கள் வியட்நாம் மக்கள்'

### தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். பாராட்டு

சென்னை, ஜூலை 8

"கடுமையான, சோதனை மிகுந்த காலகட்டத்திலும் தீரத்துடன் போராடி வியட்நாம் மக்கள் தமதுகலாச்சாரத்தைப் பாதுகாத்தது பாராட்டுதற்குரியது" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினர்.

தற்போது தமிழ்நாட்டுக்கு விஜயம்செய்துள்ள வியட்நாம் சோஷலிஸக்குடியரசின் திரைப்படக்குழு நேற்றுத் தமிழ்நாடு முதலமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

மேற்படி சந்திப்பின்போதுதான் திரு. எம். ஜி. ஆர். வியட்நாம்மக்களின் தீரத்திற்குத் தம் பாராட்டைத்தெரிவித்தார். பாரதத்திற்கும் வியட்நாமுக்கும் இடையில் திரைப்பட ஏற்றுமதி-இறக்குமதி, தொழில்நுட்ப பரிவர்த்தனை போன்ற விஷயங்கள் குறித்து குழு திரு. எம். ஜி. ஆருடன் ஆலோசித்தது.

### புரட்சியைப் பிரதிபலிக்கும் படங்கள்

இக்குழு நிருபர்கள்மத்தியில் பேசுகையில், "யுத்த காலத்தில் படாதிபதிகள் படத்தயாரிப்பில் ஈடுபடுவதில் மிகுந்த சிரமங்கள் இருந்ததாகவும் இப்போது அந்த நிலை நீங்கி, படத்தயாரிப்பாளர்கள் தயாரிப்பில் உற்சாகம் காட்டிவருவதாகவும் குழு தெரிவித்தது.

வியட்நாமில் தயாராகும் படங்கள் பெரும்பாலும்புரட்சி யுத்தம் என்பனவற்றை அடிப்படையாக வைத்தே தயாரிக்கப்படுகின்றன என்றும் குழு தெரிவித்தது.

பாரதத்துடன் திரைப்படக் கூட்டு முயற்சியில் ஈடுபடத் தாம் விரும்புவதாக குழு கூறியது.

மேற்படி குழு மாமல்லபுரத்திற்கும் விஜயம் செய்தது.

# வரி அதிகரிப்புக்கு

## பட அதிபர்கள் எதிர்ப்பு

சென்னை, ஜூலை 8

மத்திய அரசின்வரிவிதிப்பை எதிர்த்து படஅதிபர்கள் போராட்டம் நடாத்தவுள்ளார்கள்.

இதுதொடர்பாகடெல்லியில் படஅதிபர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக அவசர கூட்டமொன்றை கூட்டினர்கள்.

இதனல் திரைக்குவர திகதியிடப்பட்ட "சொர்க்கம் நரகம்", "கவிக்குயில்" இன்னமும் திரையிடப்படவில்லை.

இதைவிட ஜூன் மாதம் தணிக்கைசெய்யப்பட்ட 5 மலையாளப் படங்களும், 5 தெலுங்குப்படங்களும், 2 கன்னடப்படங்களும் திரையிடப்படவில்லை. (கெ-உ)

## பேராசிரியர்கள் ஐ. தே. கவுக்கு பிரசாரம்

கொழும்பு, வெள்ளி

இலங்கைப் பல்கலைக் கழக பேராதனை வளாகத்தைச் சேர்ந்த 50 பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் அநேகர் ஐ. தே. க. மேடைகளில் தோன்றி பிரசாரம் செய்துவருகின்றனர். (இ)

# வட்டு. தொகுதியில வாக்குக் கேட்க ஐதேகவுக்கு என்னஉரிமை?

**— திருநாவுக்கரசு**

பண்டத்தரிப்பு, வெள்ளி "பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த விடாது கிழித்தெறியச் செய்தவர்கள் இன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஜே ஆர்? ஜெயவர்த்தனவும் அவரது சகாக்களுமேயாகும். அப்படியாயிருக்கும்போது வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு வாக்களிக்குமாறு கேட்க என்ன உரிமை இருக்கிறது?"

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு சில்லாலை தெற்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது கேட்டார்.

ஆசிரியர் திரு. ஏ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் சில்லையூர் சென்.ஜேம்ஸ் மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டதாவது:-

"தமிழ் பேசும் மக்களின் ஆகக் குறைந்த உரிமைகள் சிலவற்றையாவது உள்ளடக்கியிருந்த பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக்கூட சிங்களமக்களுக்கு பாதகம் விளைவிப்பது என்று எதிர்ப்பிரசாரம் செய்து கிழித்தெறிய வைத்தவர் இன்றைய ஐ. தே. கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, அவரது ஆட்சியில் தமிழ்மக்களின் உரிமைகள் கிடைத்துவிடும் என எதிர்பார்ப்பது பகற்கனவாகும். தமிழ் மக்கள்வாழும் வட்டுக்கோட்டையில் வந்து ஐக்கிய தேசியக் கட்சியினர் வாக்குக் கேட்பதற்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்"

மாவைசேனாதிராசா, வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி, சபாநாராயணன், த.சந்ததியார், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (இ)

# புகைவண்டிப்பகுதி ஊழியரும் தமிழர் கூட்டணிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், சனி

எதிர் வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வெற்றிக்காக புகைவண்டிப்பகுதி ஊழியர்கள் அனைவரும் செயற்பட வேண்டும் என்ற தீர்மானம் புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத்தின 13வது ஆண்டுப் பொதுக்கூட்டம் யாழ். வை. எம் சி. ஏ. மண்டபத்தில் தலைவர் திரு. கணேசரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது கூட்ட ஆரம்பத்தில்ம மறைந்த தமிழர் தலைவர்கள் அமரர் மு. திருச்செல்வம், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரின் நினைவாக மௌனஞ்சலீ செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய தலைவர் கணேசரத்தினம் கூறியதாவது: "ஈழத்தில் தமிழர்கள் தங்கள் இழந்த தாயகத்தை மீட்பதற்காக விடுதலைப் போராட்டத்தை வேகமாகவும் விவேகமாகவும் நடாத்தி வருகிறார்கள். தமிழர் தாயகம் மீட்கப்பட்டாற்றான் தமிழர்கள் குறிப்பாகத் தமிழ்த் தொழிலாளர்கள் தாம் இழந்த உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரமாக வாழ முடியும். எனவே தமிழர் மண்ணை மீட்டெடுக்கும் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழனும் ஈடுபட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத கடமையாகும். மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் யாவரும் இணைந்து பேரணியாம் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலப்படுத்துவோம். தமிழர் விடுதலைக் கூட்டணி யென்னும் பலம் வாய்ந்த இயக்கத்தின் அத்திபாரத்தில் எமது தமிழ் ஈழத்தை பலம் வாய்ந்த கோட்டையாகக் கட்டியெழுப்புவோம்".

பின்வருவோர் சங்கத்தின் நட்பு வருட அலுவலர்களாக தெரிவு செய்யப் பட்டார்கள்.

தலைவர் திரு. த. கணேசரத்தினம், துணைத்தலைவர்கள்: திரு. ந. இராசேந்திரன், திரு. தி. அ. மரியநாயகம், பொதுச்செயலாளர் திரு. தி. சுந்தரலிங்கம், துணைச் செயலாளர் திரு. சி. இலிங்கவேலாயுதம், பொருளாளர் திரு. பெ. விக்னேஸ்வரன், துணைப் பொருளாளர் திரு. க. செ. பரமசாமி.

செயற்குழு உறுப்பினர் எண்மர்; திருவாளர்கள் வே. செல்வநாயகம் என். சிவகடாட்சம், பொ. சிவரத்தினம், வ. சேனாதிராசா, வே. குமாரசாமி, பொ. கனகராசா, ஜெ. ஜோசப், செ. பவானந்தன். (இ)

# "ஐ. தே. க. ஆட்சியில் மீனவர் பிரச்னைகள் தீரும்"

**—காவலூர் வேட்பாளர்**

யாழ்ப்பாணம், சனி

"இந்தநாட்டில் இன்றுள்ள பசி, பட்டினி, பஞ்சம் ஆகியவற்றினை ஒழித்து நல்லதொரு சுபீட்சமான வாழ்வை எமக்களிக்கக்கூடியது ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றே. இந்த நாட்டில் மக்கள் நலமுடன் வாழ, தமிழர் உரிமையை வழங்க ஐக்கிய இலங்கையின்கீழ் சகல இன மக்களும் பாகுபாடின்றி வாழ ஐக்கியதேசியக் கட்சியே வழிவகுக்கும்"

இவ்வாறு அல்லைப்பிட்டிக் கடற்றொழிலாளர் மத்தியில் காவலூர்த் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ம. அமிர்தலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசிய நாரந்தனை ஐ. தே. கட்சித் தலைவர் திரு. சொர்ணலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில், உண்மையான இன ஐக்கியத்திற்காகவும், இளைஞர் நலத்திற்காகவும் சிரமைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினரையே நாமும் தெரிவு செய்யவேண்டும் என்றார். அவரைத் தொடர்ந்துரையாற்றிய ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர் திரு. ம. அமிர்தலிங்கம் தமதுரையிற் கூறியதாவது:

'ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்தவுடன் மீனவர்களின் சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாணப்படுவதுடன் காப்புறுதித்திட்டமும் அமுலுக்கு வரவுள்ளது என்று கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் திரு. கே. திரவியம், திரு. கனகசபாபதி, திரு. விஸ்வநாதன், திரு. ஜெயராம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (கா—அ)

# வீட்டுக்காரரைத் தாக்கி கொள்ளை

பண்டத்தரிப்பு, வெள்ளி

நள்ளிரவு வேளையில் வீட்டில் தனியாக நித்திரை செய்த வீட்டின் சொந்தக்காரரைத் தாக்கி அவரின் வாய்க்குள் துணியைத் திணித்துவிட்டு அங்கிருந்த தங்க நகைகள், விலையுயர்ந்த சேலைகள் உட்பட சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று அளவெட்டி தெற்கில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

அளவெட்டி தெற்கிலுள்ள ந. துரையப்பா என்பவர் தனியாக நித்திரை செய்து கொண்டிருந்த சமயம் இரவு ஒரு மணியளவில் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அவரை பலமாகத் தாக்கிவிட்டு அவரின் வாய்க்குள் துணியைத் திணித்துவிட்டு அங்கிருந்த பொருட்களைக் கொள்ளையடித்தனராம்.

அன்று இரவு அவரது மனைவி தமது உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்த சமயமே இத் திருட்டு நடைபெற்றுள்ளதாம்.

இக்களவு தொடர்பாக வீட்டின் சொந்தக்காரர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்த புகாரையடுத்து பொலிசார் உடனடியாகச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று விசாரணை நடாத்தினர். இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (இ)

# "பிரதேச சுயாட்சியே தமிழருக்குகந்தது"

**—முன்னாள் வட்டு. எம். பி.**

காரைநகர், வெள்ளி

1970-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மாறாக நான் இதுவரை செயல்படவில்லை என்று வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. ஆ. தியாகராசா அவர்கள் தன்னை ஆதரித்து காரைநகர் புதுரோட்டுச் சந்திக்கு அருகாமையில் வர்த்தகர் திரு ஏ. வி. தேவராசா தலைமையில் நிகழ்ந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது -

தனிச்சிங்களச் சட்டத்தை நான் இதுவரை ஏற்றதில்லை. நான் மொழியுரிமைக்கு மாறாக நடக்கவில்லை. வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் தமிழில் வழக்கை விசாரிப்பதற்கான சட்டமும் எனது காலத்தில்தான் நிறைவேற்றப்பட்டது. 1948-ம் ஆண்டிலிருந்து காரைநகருக்கு வரும் என்று எண்ணியிருந்த குழாய்நீரும், மின்சாரமும் எனது காலத்தில்தான் கிடைக்கப்பெற்றன. இதையெல்லாம் உணர்ந்துதான் மக்கள் செயற்பட வேண்டும். நான் என்றும் தனிநாட்டுக் கொள்கைக்கு மாறாகவே இருப்பேன். பிரதேச சுயாட்சிதான் தமிழர்களுக்கு உகந்தது' என்றார்.

இக்கூட்டத்தில் திரு. மு. அம்பலவாணர், மு குணநாயகம், நாவேந்தன் உட்படப் பலர் பேசினர். (அ)

வாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

### தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ................ |
| 80. | வட்டுக்கோட்டை | ................ |
| 81. | காங்கேசன்துறை | ................ |
| 82. | மானிப்பாய் | ................ |
| 83. | கோப்பாய் | ................ |
| 84. | உடுப்பிட்டி | ................ |
| 85. | பருத்தித்துறை | ................ |
| 86. | சாவகச்சேரி | ................ |
| 87. | நல்லூர் | ................ |
| 88. | யாழ்ப்பாணம் | ................ |
| 89. | கிளிநொச்சி | ................ |
| 90. | மன்னார் | ................ |
| 91. | முல்லைத்தீவு | ................ |
| 92. | வவுனியா | ................ |
| 94. | திருகோணமலை | ................ |
| 95. | மூதூர் | ................ |
| 96. | கல்குடா | ................ |
| 97. | மட்டக்களப்பு (1) | ................ |
| | (2) | ................ |
| 98. | பட்டிருப்பு | ................ |
| 100. | சம்மாந்துறை | ................ |
| 101. | கல்முனை | ................ |
| 102. | பொத்துவில் (1) | ................ |
| | (2) | ................ |
| 103. | புத்தளம் | ................ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 85 | பருத்தித்துறை | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ................ |
| | | 2. | ................ |
| | | 3. | ................ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ........... ரூபா ........... இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைகளுக்கும் அதன் நடுவர் குழு"வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி .. ...........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றுவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977.

4-வது வாரம்
நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-3-
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா
தங்கப்பதக்கம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
கணவன்

66-வது நாள்
ராணி
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
(Last few days)
ROBINSON CRUSOE
(Family Entertainment) (Scope-color)
1-30 p. m. Special show for Schools

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி-பத்மினி
ஸ்ரீராம்
நடித்த
கோடீஸ்வரன்
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

சாந்தி யாழ் நகர் போன்: 7642
சிவாஜி-சாவித்திரி (9வேடங்கள்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நவராத்திரி (புதியபிரதி)
11-7-77 முதல்: முத்துராமன், விஜயா நடித்த
தீர்க்க சுமங்கலி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
சிவராம், கீதாஞ்சலி,
தர்மலிங்கம், ஸ்ரீதேவி
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

63-வது தினம்
ராஜா
(யாழ்நகர்) போன்: 7180
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

REGAL (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
The first class comedy sparkles with an excellent cast romance and a bevy of glorious girls.
FRANKIE HOWERD, DORA BRYAN
in
"The Great St. Trinian's Train Robbery"
Color, (Family Entertainment)

வெலிங்டன் (யாழ். நகர்) 10-ந் திகதி வரை
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
தேன் நிலவு
விரைவில் ராஜன்-ஜெயசித்ரா
தாய் இல்லா குழந்தை

லிடோ போன்: 7693
(யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பந்தபாசம்

## "மின்விஸ்தரிப்புத் திட்டத்திற்கு வைரமுள்ள பனை மரக்கம்பங்கள் விநியோகித்தல்"

வட்டுக்கோட்டைக் கிராம சபை மின் விஸ்தரிப்புத் திட்டத்திற்கு கீழ்க்காணும் விபரப் பிரகாரம் வைரமுள்ள பனை மரக் கம்பங்கள் நூற்றி எண்பது (180) விநியோகிப்பதற்கு உரிய கூறு விலை கோரப்படுகின்றது. ரெண்டர்ப் படிவம் வட்டுக்கோட்டைக் கிராம சபை அலுவலகத்தில் 11-7-77-ம் திகதியிலிருந்து 20-7-77-ம் திகதி வரை காலை 8-00 மணியிலிருந்து மாலை 3-30 மணிவரை ரூபா 25/- ரெண்டர்ப் பணமாகவும் ரூபா 10/- ரெண்டர் படிவப் பணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ரெண்டர் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 1977-ம் ஆண்டு ஆடிமாதம் 25-ம் திகதி காலை 10-00 மணிவரை யாகும்.

### விபரங்கள்

1. குறித்த பனைமரம் ஒவ்வொன்றும் 30 அடி நீளமாக இருத்தல் வேண்டும்.
2. பனைமரம் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிளக்கப்பட்டு உள்ளே இருக்கும் பலம் அற்ற பாகம் (சோத்தி) அகற்றப்பட்டு, பின்னர் ஒன்ருக்கி இருத்தல் வேண்டும்.
3. கம்பத்தின் நுனிப்பாகம் 5 1/2 அங்குலம் விட்டம் உள்ளதாகவும், அடிப்பாகம் 8 3/4 அங்குலம் விட்டம் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

நா. அமிர்தலிங்கம்
தலைவர்,
கிராமசபை-
வட்டுக்கோட்டை.

கிராமசபை-அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
4-7-77. 6602

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30 7-00, 9-30
HOLIDAY ON THE BUSES

## வரி விளம்பரம்

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளிலும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள். கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரேபயிற்சி நிலையம். NIPT, வெல்டிங் (Electric and Gas), இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Motor Mechanism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் — இரவு வகுப்புகள். National Institutes, மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6610

### விற்பனைக்கு

இளைஞர்கள் விரும்பிப் படிப்பது "சாமிஜி" எழுதிய "தேர்தல் வருகிறது தெளிவாகச் சிந்தியுங்கள்" என்னும் புத்தகமே! கிடைக்குமிடம்; பூபாலசிங்கம், புத்தகசாலை, யாழ்ப்பாணம். 6601

## விற்பனைக்கு

பருத்தி, செயற்கைப்பட்டு கழிவு நூல்கள்; செயற்கைப் பட்டு நூல் வகைகள் சுற்றப் பட்ட கடதாசி, பிளாஸ்டிக், உலோகக் குழாய்கள், கழிவு கடதாசி வகைகள், உடை தயாரிக்கும் நிலையத்தின் வெட்டுத்துண்டுத் துணிகள் ஆகியன விற்பனைக்குண்டு.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்.
பண்டத்தரிப்பு. 6616

## கடுகதி—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குச் செல்லும் உத்தரதேவி கடுகதி நாளைக்காலை 8 மணிக்குப் புறப்பட்டு மாலை 4-25க்கு கொழும்பைச் சென்றடையும்.

அதேபோன்று காலை5-55க்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் யாழ்தேவி கடுகதி ரயில் நாளை காலை8 மணிக்குப் புறப்பட்டு மாலை 4-25க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். (இ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. ஈடு/14523
சுப்பையா பொன்னம்பலம் கந்தையா,
247, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிராக
1. தியோகுப்பிள்ளை பத்திநாதனும், பெண்
2. திரேசம்மா இல. 6, 3-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் ஈடு/14523-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ந் திகதி (8-8-77) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 5305/-ம் 4-9-1974 தொடக்கம் 23-10-1975 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 593-45 சதம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "நாவலடியும் மறுபிரிவுகளும்" பரப்பு நில. இலாச்சம் ஒன்று குளி எட்டு. (பர. நில. இலா. 1 குளி 8) இது 1964-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2-ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா P. S. சேனுதிராசாவால் 181-ம் இலக்கத்தில் அளைத்து வரைந்த படத்தில் 2 என்னுமெண்ணுல் காட்டப்பட்டுள்ளது. வீடும் கிணறும் இந்தப் பர. நில. இல. ஒன்று குளி எட்டுக்கும் எல்லை கிழக்கு தொம்மை வயித்தியின் உரிமைக்காரருக்கும் பிலிப்பு மரியாம்பிள்ளை பெண் ரேசம்மாவிற்குமுரிய வாதனங்கள். வடக்கு ஒழுங்கை, மேற்கு நீக்கிலான் யாக்கோ பெண் இன்னேசத்தினுதனம், தெற்கு மரியாம்பிள்ளை செபஸ்தியின் ஆதனம் இதடங்கலும்.

அ. போ. எதிர்மன்னசிங்கி,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
26-5-77. 6612

வை. ச. செந்தில்நாதன்
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

1973ம் ஆண்டின் நீதி நிருவாகச் சட்டம் இல. 44 மரணசாதனம் நிரூபிக்கப்பட்டதற்கும் தத்துவம் கொடுப்பதற்குமான 283ம் பிரிவின் கீழான இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் காலஞ்சென்ற சின்னத்தம்பி சேனுதிராஜாவின் மரணசாதனச் சொத்துக்கள் விடயத்தில்

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 309

கொக்குவில் கிழக்கு, பொற்பதி ரோட், சேனுதிராஜா மகேந்திரராஜ்
விண்ணப்பகாரன்

மற்றும்
1. சேனுதிராஜா கைம்பெண் மனோன்மணி,
2. சேனுதிராஜா - தனராஜ்.
3. சேனுதிராஜா - புனிதராணி,
4. சேனுதிராஜா - குணராணி,
5. சேனுதிராஜா - வரதராஜ்,
6. சேனுதிராஜா - யோகராஜ்,
7. சின்னத்தம்பி சவுந்தரநாயகம், 3-6 பராயமற்றவர்கள் தங்கள் சட்டப் பாதுகாவலர் மூலம் தோற்றுகின்றனர். எல்லோரும் கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எதிர்வாதிகள்

280ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1976ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலுள்ள கூற்றுக்கள் பார்த்தமாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளன எனத் திருப்தியடைந்ததின் பேரில் 1977ம் ஆண்டு தை மாதம் 27ந் திகதி அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினுலன்றி யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்தின் தத்துவப் பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்ச் செயற்பட்டுப் பின்வரும் கட்டளைகளை இடுகிறேன்.

அ. பிரசித்த நொத்தாரிஸ் டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 12-4-1976ந் திகதியிடப்பட்ட 219ம் இலக்க மரண சாதனம் (அதன் மூலப் பிரதி இணைக்கப்பட்டு இக்கந்தோரில் வைக்கப்பட்டுள்ளது) நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும் குறித்த மரணசாதனத்தின் தத்துவகாரன் மேற் சொல்லப்பட்ட விண்ணப்பகாரனே என்றும் குறித்த மரணசாதனத்தின் தத்துவம் குறித்த விண்ணப்பகாரனுக்கே வழங்கப்படுகிறதென்றும் இத்தாற் கட்டளையிடுகிறேன்.

ஆ. இவ்வழக்கின் நோக்கங்களுக்காக 7ம் எதிர்வாதி பராயமற்ற 3ம், 4ம், 5ம், 6ம் எதிர்வாதிகளின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1976ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதி.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
தத்துவ அதிகாரி.

காரணம் காட்டும் திகதி 7-4-77க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
8-3-77 தத்துவ அதிகாரி.

காரணம் காட்டும் திகதி 3-6-77க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
7-4-77 தத்துவ அதிகாரி.

காரணம் காட்டும் திகதி 12-7-77க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
3-6-77 தத்துவ அதிகாரி.
6613

ஈழநாடு
EELANADU

# "தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வதேச இயக்கமானது"

—'தர்மர்'

சங்கானை வெள்ளி

தமிழன் இந்த நாட்டில் தன்மானத்துடன் வாழவேண்டுமா இல்லையா என்பதுதான் தற்பொழுது எழுப்படும் கேள்வி. இந்நாட்டில் தமிழன் ஆண்ட சரித்திர வரலாறுகள் பல உண்டு. போர்த்துக்கீயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என பல அந்நிய இனத்தவர் நாட்டைக் கைப்பற்றியபின் அவர்களில் இறுதியாக ஆண்ட ஆங்கிலேயர் நிர்வாக வசதிக்காகவே சிங்கள தமிழ் இராட்சியங்களை ஒன்றிணைத்தனர்.

இவ்வாறு வட இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவரும் முன்னைநாள் சமசமாஜக்கட்சி வடபிரதேச உறுப்பினருமான திரு துரைராசசிங்கம் கூறினார்.

வட்டுக்கோட்டைத் தொகுதிவேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரித்து தொட்டிலடி சனசமூக நிலையத்திற்கருகாமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார். இளைப்பாறிய ஆசிரியர் திரு. த. பொன்னம்பலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மானிப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு. வி. தருமலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

1948-ம் ஆண்டிலிருந்து எமக்கும் சுதந்திரம் கிடைக்கும் எனநம்பி மாறி மாறி வந்த ஆட்சியாளருடன் ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகள் பல செய்தோம் அவை எல்லாவற்றையும் சிங்கள அரசு புறக்கணித்தது. எனவேதான் எமது உரிமைகளை வழங்க முன்வராத அரசுகளை எதிர்க்க வேண்டிய வேளை எதிர்த்தோம். சிங்கள கல்விமான்களே தாம் ஆளும் இனமெனவும் நாம் ஆளப்படும் இனமெனவும் எண்ணும் போது பாமரமக்கள் என்னதான் செய்வர்.

அன்று 33 நாடுகளில் தமிழர் தமது கலைகலாச்சாரம் மொழி ஆகியவற்றைக் காத்துவந்தனர். ஆனால் இன்று முன்றே மூன்று நாடுகளில் மட்டும்தான் அவர்கள் வாழ்கின்றனர், இதேநிலை எமக்கும் ஏற்படக்கூடாது என்ற இறுதி முடிவில்தான் தமிழர் கூட்டணி தமிழ்மக்களுக்கென ஒரு நாட்டை அமைக்க, இழந்த ஆட்சியை மீட்க தமிழ்மக்களின் ஆதரவை நாடியுள்ளது.

ஒருதேசிய இனம் விடுதலை பெறுவது உள்நாட்டுப் பிரச்னைஅல்ல இது சர்வதேச விடயம் உதாரணமாக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரை ஐக்கிய நாடுகள் சபை அழைத்து பேச்சு வார்த்தை நடாத்திய எமது இயக்கமும் சர்வதேச இயக்கமாக மாறியுள்ளது.

வட்டுக்கோட்டைத் தொகுதி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு, எஸ். கே. திருச்சிற்றம்பலம் க.சிவதாசன், ச சந்ததியார், ச.கந்தசாமி, வ. விதிரமலை ஆகியோரும் உரையாற்றினர். (இ)

# இன்று நடக்கும் இல்லப் போட்டிகள்

யாழ்ப்பாணம், சனி

நாளை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது. யாழ். உயர்நீதிமன்ற நீதிபதி ஜனாப் அப்துல் காதர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறுகிறது. (கி-அ)

# விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ். கணகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

வடமாநில உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். திருமதி தங்கராஜா பரிசில்களை வழங்குவார். (இ)

## சென். ஹென்றிஸ்

(பண்டத்தரிப்பு)

இளவாலை புனித என்றியரசர் கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. எம். ஜே, ஏ. ஜெயநாதன் கலந்து கொள்வார். வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி ஏ. ஜெயநாதன் வழங்குவார். (இ)



வேலர்: அரிசியல தான் கல்லைப் போடுறுங்களை எண்டால் அரசியல் கூட்டத்திலும் கல்லுப் போடுறுங்கள்.

மயிலர்: உந்தக் கல்லுப் போடுறெல்லையைக் கொண்டுபோய் ரோட்டுப் போடவிட்டால் என்ன?

மணியம்: அந்தக்கால வானரங்கள் கல்லுப் போட்டுதுகள் பாலம் கட்ட, இந்தக்காலத்து வானரங்கள் கல்லுப் போடுதுகள் சமாதி கட்ட.

— சுந்தர்

# சஞ்சய் மனைவிக்கு சுவிஸ்வங்கியில் கணக்கு?

## லோக சபையில் கேள்வி

புதுடில்லி, ஜூலை.8

சஞ்சய் காந்தியின் மனைவிக்கு சுவிஸ் வங்கியில் 'ட்ரால்ட்' எடுக்கப்பட்டதா? இந்த விவகாரம் லோக்சபாவில் நேற்று பெரும் அமளியை ஏற்படுத்தி விட்டது.

சஞ்சய் காந்தியின் மனைவி மேனகாவுக்கு சுவிஸ் வங்கியில் 'ட்ராவ்ட்' எடுக்கப்பட்டதாகக் கூறப்படுவது பற்றி நிதியமைச்சர் திரு.பட்டேல் நேற்று சபையில் பிரஸ்தாபித்த போது ஒரே கூச்சலும், குழப்பமும் எழுந்தது.

இவ்விதம் கூக்குரலிட்டால் சபையை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று சபைத்தலைவர் திரு.சஞ்சீவ ரெட்டி கூறியபோதும் கூச்சல் அடங்கவில்லை.

இந்த விவகாரம் பற்றி ஆராய்ந்த பின்னரே எதுவும் கூறமுடியும் என்று அமைச்சர் திரு.பட்டேல் தெரிவித்தார்.

பெரும் விவகாரம் ஒன்றை அமைச்சர்சாதாரனவிஷயமாக கருதுகிறார். என்று ஜனதா கட்சி உறுப்பினர் ஒருவர் சபையில் குற்றஞ்சாட்டினார்.

### சஞ்சய் மறுப்பு

இதேவேளை, மேற்படி சுவிஸ் விவகாரகுற்றச்சாட்டை திரு. சஞ்சய்காந்தி ஏற்கனவே மறுத்துள்ளது தெரிந்ததே. (உ)

# அன்று—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடந்த கூட்டத்தில் திரு. ஜெயதேவன் தொடர்ந்து பேசுகையில் 'தமிழர்சுயாட்சிக் கழகம் 1970-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் சுயாட்சிக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட போது 'தனிநாடு' என்ற கோரிக்கை தமிழினத்தை அழிக்கும் திட்டம் - அது தற்கொலைக்கு ஒப்பானது' என்று கூறி கடந்த தேர்தலில் தமிழர் சுயாட்சிக் கழகத்தைத் தோற்கடித்த தமிழரசுக் கட்சியினர் அன்று நாம் சொன்னதை ஏழுவருடங்களின் பின் புதிய பாணியில் 'தனிநாடு' என்று கோஷமிட்டு வருகின்றனர்' என்றார். (இ)

# கொழும்பு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த நான்கு விற்பனைப் பெண்களையும் வேறு ஆண்களையும் ஆயுத முனையில் அங்கிருந்த அறையில் விட்டு அறையைப் பூட்டினராம்.

சிறிது நேரத்தில் வெளியிலிருந்து அங்கு பணத்துடன்வந்த அக்கடையின் இன்னுமொரு ஊழியரிடமிருந்து பணத்தைப் பறித்துவிட்டு அவரையும் அந்த அறையில் வைத்துப் பூட்டிய கொள்ளையர்கள் வீதியில் இறங்கி, வீதியில் சென்ற ஆட்களோடு ஆட்களாக மறைந்து விட்டனராம்.

அறையில் அடைபட்டுக் கிடந்த அக்கடையின் மனேஜர், பெண் ஊழியர்கள் உட்பட 10 பேரும் சிறிது நேரத்தில் கடைச் சுவரில் குளிரூட்டும் இயந்திரங்கள்பூட்டியிருந்த சிறிய துவாரங்கள் வழியாக ஒருவர்பின் ஒருவராக வெளியே வந்தனராம்.

பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். இது வரை எவரும் கைதாகவில்லை. (இ)

# தமிழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். அங்கத்தவர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க கைதட்டி ஆரவாரம் செய்யக் கூடாது. கரகோஷம் எழுப்பாமல், மேசைமீது மெல்லத் தட்டவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

மற்றுமொரு கட்டத்தில், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர்; "மத்திய அரசுடன் மாநில அரச உறவு சுமுகமாக இருக்கும்" என்றுகூறிய போது, தி.மு.கழக உறுப்பினர் திரு. கே. சுப்பு எழுந்து; "உறவு நேசமாகவும் பாசமாகவும் இருக்கவேண்டும்; மோசமாகக் கூடாது" என்று சொன்னபோது, சபையில் சிரிப்பொலி கேட்டது.

அ.இ.அ.தி.மு.கழக உறுப்பினர் ஒருவர், "உறவுக்கு கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று சொன்னபோது கலைஞர் மு.கருணாநிதி உள்ளிட்டு எல்லா தி.மு கழக உறுப்பினர்களும், தலையை முன்னே நீட்டி, அந்த அங்கத்தவர் அடுத்து என்ன கூறப்போகிறார் என்று உன்னிப்பாகக் கேட்க முயன்றபோது, அந்த உறுப்பினரோ "பகைமையை ஒழிப்போம்..." என்று தொடங்கியதும், கரகோஷம் எழுந்தது! தி. மு. க. உறுப்பினர்களும் மகிழ்ச்சியுடன் தங்கள் தலைகளை பின்னே இழுத்துக்கொண்டனர்.

தமிழக கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிப்பதை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேண்டுமென்றே குறைகண்டு புறக்கணிக்கிறார்களே என்ற தோரணையில் அ.இ.அ.தி.மு. கழக கரூர் தொகுதி உறுப்பினர் "வேண்டாதவன் பெண்டாட்டி கதையாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எடுக்கக் கூடாது" என்றதும் உடனே எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி "ஆளுனரின் உரையை, ஆகாத பெண்டாட்டி கதையாக அங்கத்தவர் கருதக் கூடாது" என்று திருப்பிக் கூறியதும் சபையில் சிரிப்பொலி எழுந்தது.!

# இன்று..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஞல் நிகழ்த்தப்படும்.

புழுத்தாக்கத்தினல் பாதிப்புறும் விவசாயிகள் விரிவான ஆலோசனைபெற்றுபாதிப்பைக் கட்டுப்படுத்தும் நிலையை இக் கருத்தரங்கு மூலம்பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

# யாழ். மருத்துவ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஈடுபட்டிருந்தார்.

வேலை நிறுத்தத்தால் துன்புறப் போகும் பொதுமக்கள் எங்களை மன்னிக்க வேண்டும். யாழ். வைத்தியசாலை மருத்துவமாதர்கள் மட்டுமே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள், தொடர்ந்து நீதியான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நிலைமை மோசமாகலாம்."

## மரண அறிவித்தல்

### ஓவசியர் சிவசம்பு

ஏழாலை மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஓவசியர் சிவசம்பு அவர்கள் காலமானார்கள். அன்னார் காலஞ்சென்ற தாயம்மாவின் அன்புக் கணவரும் திருமதி. செல்லம்மா சிவஞானசுந்தரம், கொழும்பு ரயில்வே பகுதியைச் சேர்ந்த வடிவேலு, திருமதி புவனேஸ்வரி திருஞானசெல்வம், அநுராதபுரம் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் பத்மநாதன், திருமதி மீனும்பிகை கனகசபாபதி, திருமதி மகாதேவி குணசிங்கம் ஆகியோரின் தகப்பனுரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் "மங்களகிரி" ஏழாலை மேற்கில் இன்று 9ம் திகதி காலை 9.00 மணியளவில் நடைபெறும்.

6622

## மரண அறிவித்தல்

### திருமதி அ. கனகம்மா

காலஞ்சென்ற அப்பாத்துரை ஆசிரியரின் அன்பு மனைவி கனகம்மா காலமானார். இவர் திருமதி அரியமலர் பாலச்சந்திரமூர்த்தியின் (ஆசிரியை, நாவற்குழி மகாவித்தியாலயம்) அன்புத் தாயாரும், திரு. பாலச்சந்திரமூர்த்தி (நில அளவைப் பகுதி, அநுராதபுரம்) அவர்களின் மாமியாரும், குகமினி, உமாமினி, சியாமளன், நிமலன் இவர்களின் அன்புப் பேத்தியாரும், கோலாலம்பூர் காசிப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கோப்பாயைச் சேர்ந்த பொன்னம்பலம் நல்லம்மாவின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 9-7-77 மாலை 4-00 மணிக்கு 24, 3ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து கந்தன்காடு கோப்பாய் குடும்ப மைதானத்தில் தகனஞ்செய்யப்படும்

6619

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அச்சாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெஸ்லோன் மேலவீதி 43-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka